DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 5/2017 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சொர்ணலிங்கம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது தாணிச்சாவூரணியில் வசித்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் ராமசாமியை எனக்குத் தெரியும். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 04.04.2015 ம் தேதி நான் வேப்பங்குளம் கிராமத்திற்கு சென்றிருந்தேன். அப்போது ராமசாமி என்பவரை ஆஜர் எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டி, வாக்குவாதம் நடந்து வந்தது. மணல் கடத்தல் சம்மந்தமாக போலிஸாருக்கு தகவல் சொன்னதாக ராமசாமி என்பவருடன் ஆஜர் எதிரிகள் வாக்குவாதம் நடந்தினார்கள். அப்போது ராமசாமி என்பவரின் வலது காலில் எதிரி முருகதாஸ் என்பவர் அருவாளில் வெட்டியதில் இரத்தக் காயம் ஏற்பட்டது. பின்னர் ராமசாமி என்பவர் டீக்கடை பக்கத்தில் போய் ஒளிந்து கொண்டார். அதன் பிறகு நாங்கள் ராமசாமியை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம். வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

1. நான் தாணிச்சாவூரணியில் இருந்து வேப்பங்குளம் கிராமத்திற்கு என்ன வேலையாக சென்றேன் என்ற விபரத்தை போலிஸார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் நான் ஏதார்த்தமாகத்தான் சென்று கொண்டிருந்தேன்.

எதிரிகள் எப்போது வந்தார்கள் என்றும், என் மச்சினன் எப்போது வந்தார் என்றும் சொன்னால் சண்டை ஏற்கனவே நடந்து கொண்டுதான் இருந்தது. அவர்களுக்கிடையில் என்ன பேசிக்கெண்டார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் சொல்லமுடியாத கெட்ட வார்த்தையால் பேசிக்கொண்டிருந்தார்கள். மருத்துவமனைக்கு யார்யார் காயம்பட்ட நபரை அழைத்து சென்றார்கள் என்றால் அழைத்துச் சென்றநபர்கள் யார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. காயம்பட்ட நபர் எந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றும், அவ்வாறு பார்த்திருந்தால் காயம் அடைந்திருந்த நபர் எந்த வாகனத்தில் யாரால் அழைத்து செல்லப்பட்டிருப்பார் என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் அதுகுறித்து தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. ஆஜர் எதிரி முருகதாஸிற்கு சொந்தமான இருபது பைப்பை புகார்தாரர் ராமசாமியின் அண்ணன் கடனாக பெற்றுச் சென்று, அதை திருப்பிக் கொடுக்காததால் ஏற்பட்ட பிரச்சனையின் பதிலுக்கு புகார்தாரால் கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு நான் புகார்தாரரின் மச்சான் என்பதால் அவருக்கு சாதகமான பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், அதுபோன்ற சம்வபம் எதுவும் நடைபெறவில்லை என்றும், புகார்தாரருக்கு ஆதரவாக அவ்வாறு சம்பவம் நடந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் நான் நடந்ததை தான் சொல்கிறேன். ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

சாட்யால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.